**பொல்பித்திகம பிரதேச சபை - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பொல்பித்திகம பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் பொல்பித்திகம பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன்

அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும்

போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(I)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் கட்டிட அபிவிருத்திக்காகச் செலவிடப்பட்ட செலவினம் மூலதனமாக்கப்படாமை காரணமாக நடைமுறையல்லாத சொத்துக்கள் மற்றும் மூலதன ஈடுபாட்டிற்கு வருமானப் பங்களிப்புக் கணக்கு ரூபா 14,129,781 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | அடுத்த ஆண்டின் போது சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | கட்டடிடங்கள் அபிவிருத்திச் செலவினம் மூலதனமாக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நடைமுறையல்லாத சொத்துக்களின் கீழ் பௌதிக ரீதியாக இனங்காணப்படாத ரூபா 569,473 பெறுமதியான காணி மற்றும் கட்டிடங்கள் மீதியொன்றும் ரூபா 935,607 தொகையான தளபாடங்கள் மற்றும் உபகரணங்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | இச் சொத்துக்கள் குறிப்பாக இனங்காண முடியாததுடன் அந்த 02 பெறுமதிகளையும் பதிவழிப்பதற்காக உள்ளூராட்சி மன்ற ஆணையாளரிடம் ஆலோசனை பெற்றுக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | |
| (இ) | மீளாய்வாண்டின் கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 499,315 பெறுமதியான 09 நிலையான சொத்துக்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | குறைபாடுகள் நாட்குறிப்புப் பதிவு மூலம் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஈ) | மீளாய்வாண்டில் ரூபா 160,800 ஆன கணக்காய்வுக் கட்டணங்களுக்காக நிதி ஏற்பாடு மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | அடுத்த ஆண்டு கணக்காய்வுக் கட்டணங்களுக்காக கணக்குகளில் நிதி ஏற்பாடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 945,831 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 5,656,631 ஆகும்.

### 2.2 மிகை அறவீடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பிரதேச சபையின் ஏற்பாடுகளின் பிரகாரம் பொறுப்பு வாய்ந்த நபர்களுக்கு எதிராக என்னால் முன்னைய ஆண்டினுள் விதிக்கப்பட்ட 04 மிகை அறவீடுகளுக்காக ரூபா 1,283,910 தொகையை அறவிடப்பட வேண்டியிருந்த போதும் 17 மிகைகளுக்காக உள்ளூராட்சிமன்ற அமைச்சுக்கு முறையீடுகள் | இத் தொகை செலுத்தப்படவில்லை எனவும் மிகை அறவீட்டுக்குரியவர்கள் மேன்முறையீடு செய்யப்பட்டுள்ளதாக அறியத் தருகிறேன். | முன்னைய ஆண்டுகளுக்குரிய மிகை கொடுப்பு சான்றிதழுக்காக பணம் அறவிடப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| செய்யப்பட்டுள்ளதுடன் அவர்கள் விடுவிப்புக்கு அல்லது மேன்முறையீடு நிராகரிப்பதற்காக அறிக்கை ஒன்று கோரப்பட்டுள்ளதுடன் அது செயற்படுத்தப்பட்டது. | | |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2016 ஆம் ஆண்டு பொல்பித்திகம பிரதேச சபைக்கு புரநெகும செயற்திட்டத்தின் மூலம் 2000 லீட்டர் நீர்த் தாங்கி 120 ஸ்தாபிக்கப்பட்டு 6200 லீட்டர் கொள்ளலவுடன் கூடிய 02 பௌசர் வழங்கப்பட்டிருந்தன. இச் செயற்திட்டத்தின் கீழ் நீர்த்தாங்கிகளை நிறுவியிருந்த போதும் அந்த நீர்த்தாங்கிகளுக்கு நீர் வழங்கல் இடம பெற்றிருக்காததுடன் செயற்திட்டம் வெற்றியளிக்காத நிலையில் காணப்பட்டதாக அவதானிக்கப்பட்டது. | புறநெகும செயற்திட்டத்தின் மூலம் இத் தாங்கிகள் நிறுவப்பட்டுள்ளன. இந்த தாங்கிகள் 2017 ஜூன் மாதம் வாங்கப்பட்ட போதும் நீர் வழங்குவதற்காக பௌசர் தாங்கிகளை வழங்குதல் 2021 மே 12 ஆம் திகதி இடம்பெற்றது. தற்போது தெதுறு ஓயா நீர் செயற்திட்டத்தின் மூலம் குடிநீர் வழங்கல் ஆரம்பமாகியிருந்த காரணத்தால் இச்செயற்திட்டம் வெற்றியளிக்கவில்லை. | செயற்திட்டத்தைச் செயற்படுத்தும் போது திட்டமிடலுடன் கூடியதாக இருக்க வேண்டிய போதிலும் திட்டமிடப் பட்டதாகவும் நிறுவப்பட்ட நீர்த் தாங்கிகளைப் பயன்படுத்து வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) பொல்பித்திகம நகரில் நிர்மாணிக்கப்பட்டிருந்த சபைக்கு 2021 ஜூலை 26 ஆம் திகதி கையளிக்கப்பட்டிருந்த ரூபா 21,140,000 பெறுமதியுடன் கூடிய பேருந்து நிறுத்துமிடத்தில் எந்தவொரு பஸ் வண்டியும் நிறுத்தி வைத்தல் இடம்பெற்றிருக்கவில்லை. | 2021 ஜூலை 26 ஆம் திகதி மக்கள் மயப்படுத்திய பஸ் நிறுத்துமிடம் தொடர்பான நடவடிக்கைகள் ஆரம்பிப்பதற்காக குறித்த நிறுவனங்களுடன் கலந்துரையாடியதன் பின்னர் பஸ் நிறுத்திமடம் தொடர்பான நடவடிக்கைகளை | பஸ் நிறுத்துமிடங்களைப் பயன்பாட்டுக்கு எடுக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | |
|---|---|
| இந்த பஸ் நிறுத்துமிடம் அமைந்துள்ள இடத்தின் பிரகாரம் எதிர்காலத்திலும் பஸ்வண்டிகள் மூலம் வருமானமொன்று உழைக்கக் கூடிய நிலைமையொன்று அவதானிக்கப்படவில்லை. எனினும் ரூபா 330 வீதம் 10 பற்றுச் சீட்டுப் புத்தகங்கள் அச்சிடுவதற்காக வழங்கப்பட்டிருந்தது | ஆரம்பிப்பதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளதாகவும் பஸ் வண்டிகளிலிருந்து பணத்தை அறவிடுவதற்காக பற்றுச் சீட்டுகளை அச்சிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. |

**3.2 பெறுகை**

**3.2.1 ஒப்பந்த நிர்வாகத்திலுள்ள குறைபாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பொல்பித்திகம பொது விளையாட்டரங்கு திருத்தத்துக்காக ரூபா 4,794,393 தொகைக்கு ஒப்பந்தக்காரர் ஒருவருடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு வேலை பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் அவ்விளையாட்டரங்கைச் சுற்றி 320 மீற்றர் நீளமான வடிகாலொன்று அமைக்கப்பட்டிருந்த போதும் 100 மீற்றர் அளவில் பூர்த்தி செய்யப்படாத காரணத்தால் வடிகாலின் ஒரு பகுதியில் நீர் நிறைந்திருந்தது. அவ்வாறே 04 ஆம் இலக்க வேலை விடயத்தின் பிரகாரம் குருனிக் கற்கள் பரப்புதல் 636.99 கன மீற்றராகக் காண்பிக்கப்பட்டிருந்த போதும் பௌதிகப் பரிசோதனையின் போது 559.99 கனமீற்றராக இருந்ததால் 80 கனமீற்றர் குருனிக் கற்கள் பரப்புதலில் குறைவொன்று அவதானிக்கப்பட்டதால் ஒரு கனமீற்றருக்கு ரூபா 1,100 வீதம் 80 கனமீற்றர் குருனிக் கற்களுக்காக ரூபா 88,000 கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. ரூபா 4,794,393 செலவிடப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டின் போது விளையாட்டரங்கை வாடகைக்கு | உள்ளவாறாக வழங்கப்பட்ட குறுனிக் கற்களின் அளவு பரப்பப்பட்டன. எனினும் பரப்பப்பட்ட அளவில் வேறுபாடு இருப்பதால் இந்நிர்மாணத்திற்காக இப்போது இறுதிக் கொடுப்பனவு பூர்த்தி செய்யப்படாமையால் இறுதிக் கொடுப்பனவு மேற்கொள்ள முன்னர் பரப்பப்பட்ட அளவுகளில் குறிப்பிடப்பட்ட பிரகாரம் குறைபாடுகளுக்காக குருணிக் கற்களைப் பரப்புவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறியத் தருகிறேன். | கூடுதலான கொடுப்பனவு மீள அறவிடப்பட வேண்டும். |

வழங்குவதன் மூலம் எந்தவொரு வருமானமும் கிடைத்திருக்வில்லை என்பதுடன் வருடாந்த விளையாட்டுப் போட்டிகள் உட்பட நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படும் எண்ணிக்கை குறைந்த மட்டத்தில் காணப்பட்டதால் விளையாட்டரங்கை அபிவிருத்தி செய்வதன் மூலம் எடுக்கக் கூடிய நலன்கள் குறைந்து இருந்தது.